விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24


ஒலி 021 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 25 திங்கட்கிழமை (09.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720.1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## கொவிட் மிகவும் தீவிரமடைந்தால் கட்டுப்படுத்துவது மிகக் கடினம்

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்




(கொழும்பு)
நாட்டில் மீண்டும் கொவிட் தொற்று நிலைமை ஏற்பட்டால் அதனை முன்னர் போன்று கட்டுப்படுத்துவது சிரமமாக அமையும் என்று பொது சுகாதார பரிசோதர்களின் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

தற்பொழுது பல நாடுகளில் கொவிட் தொற்றுக்குள்ளான நோயாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

இலங்கையில் மீண்டும் கொவிட் தொற்று அலை ஏற்பட்டால்அதுமிகமோச மானதாக இருக்கக் 11

## ஆசியாவின் சிறந்த இடங்களில் யாழ்ப்பாணமும் தெரிவு



(அட்லான்டா)
ஆசியாவில் உல்லாசப் பயணிகள் பயணம் செய்யக்கூடிய 18 சிறந்த இடங்களில் யாழ்ப்பாணமும் ஒன்று என அமெரிக்க சிஎன்என் தொலைக்காட்சி பட்டியலிட்டுள்ளது.

வடக்குப் பகுதியான, யாழ்ப்பாணம் தமிழ் பேசும் மக்களின் முதன்மையான தாயகமாகும்.

இங்கு ஒரு கவர்ச்சிகரமான கலாசாரம் உள்ளது. அலங்கரிக்கப்பட்ட, பிரகாசமான 11

யாழ்.கொக்குவிலில்

## புலிகளின் ஆயுதங்களை தேடி இன்று அகழ்வு

(யாழ்ப்பாணம்)
யாழ்.கொக்குவில் - பொற்பதி வீதியில் தனியார் காணி ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்தில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை அகழ்வுப் பணிகள் 11

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# பதிவு செய்யப்பட்ட கட்சியாக உருவாகும்



### ரெலோ அறிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*
யார் வெளியேறினாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே பயணிப்போம். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் பதிவு செய்யப்பட்ட கட்சியாக உருவாகும் என ரெலோவின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.
*(12ஆம் பக்கம் பார்க்க)*

## தவறான முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

### பருத்தித்துறையில் சம்பவம்

(கரணவாய்)
சகோதரியின் உயிரிழப்பை தாங்கிக் கொள்ளாத இளைஞர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ள துயரச் சம்பவம் பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அவ் வொல்லை, பருத்தித்துறையை சேர்ந்த 11

## ரணிலுக்கும் எனக்கும் இடையே கொள்கை முரண்பாடுகளே உள்ளன

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் எனக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் ஏதும் கிடையாது, கொள்கை ரீதியில் மாத்திரம் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நல் லாட்சி அர சாங்கத்தில் பண்டார 11

## பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள் வெளியீடு

(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பினர்கள் 208 பேரினது கல்வி தகைமை தொடர்பான விபரங்கள் தற்போது இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் உள்ள 208 உறுப்பினர்கள் தமது கல்வி மற்றும் தொழில் தகைமைகளை பாராளுமன்ற செயலகத்திற்கு அறிவித்துள்ளனர்.

எனினும் 17 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது தகவல்களை பாராளுமன்ற செயலகத்திடம் ஒப் 11

## இந்தியாவின் ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது - பந்துல



(வவுனியா)
சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் போக்கு வரத்துத்துறை மேம்பாட்டுக்காக இந் 11

## கோட்டாவின் வீட்டுக்கருகே துப்பாக்கிப் பிரயோக முயற்சி

### பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லம் அமைந்துள்ள மிரிஹான ஜெஸ்வெல் பிளேஸ் சந்தியில் பாதுகாப்புக் கடமையின் இடையே பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், ரி 56 ரக துப்பாக்கியால் சக பொலிஸ் சார்ஜன்ட் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயற்சித்ததாகக் கூறப்படும் 11

## மின்கட்டண அதிகரிப்பு

### இறுதித் தீர்மானம் இன்று



3ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி வைகுந்தநாதன் தவரஞ்சிதம்

தோற்றம் 17 • 01 • 1959



மறைவு 03 • 01 • 2023

யாழ். தெல்லிப்பளையைப்பிறப்பிடமாகவும், தெல்லிப்பளை, குமரபுரம், பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட வைகுந்தநாதன் தவரஞ்சிதம் அவர்கள் 03.01.2023 (செவ்வாய்க்கிழமை) அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவபூபதி தம்பதிகளின் அன்பு மருகளும், வைகுந்தநாதன் அவர்களின் அன்பு மனைவியும், வசிகரன், பிரதீபன், சிவகௌரி, காலஞ்சென்றவர்களான கௌரிதாசன், கௌசிகன் ஆகியோரின் அன்புத்தாயாரும், கஜனி, சரண்ஜா, தயானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சியன், மேனுஜன் ஆகியோரின் பாச்மிகு பேர்த்தியும், தயாரஞ்சிதம், தனரஞ்சிதம், அம்பிகை தாசன், சிவதாசன், குமரதாசன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ் சென்ற ஸ்ரீகாந்தன் மற்றும் சிவகுமார், குமுதினி, விக்னேஸ்வரி, முகுந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.01.2023) காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாவிட்டபுரம் தச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர், கஞவெட்டி ஒழுங்கை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் தெற்கு.

தொடர்புகளுக்கு : 077 301 9943

(14193)

# வீதி குற்றங்களுக்கு புதிய தண்டனைகள்

## சாரதிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள புதிய சட்டத்திற்கமைய, வீதிகளில் மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தில் இருந்து புள்ளிகள் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாரதிகள் செய்யும் 32 தவறுகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும் என மோட்டார்போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. ஒரு ஓட்டுனர் உரிமத்தில் 24 மதிப்பெண்கள் குறைக்கப்பட்டிருந்தால் அந்த உரிமம் இரத்து செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி விபத்தை ஏற்படுத்திவிட்டு நிற்காமல் வாகனம் ஓட்டினால், ஓட்டுனர் உரிமத்தில் 10 புள்ளிகள் குறைக்க பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அதிவேக நெடுஞ்சாலைகளில் 150 கிலோ மீற்றருக்கு மேல் வேகத்தில் ஓட்டினால் 8 புள்ளிகள் குறைக்கப்படும். காப்பீட்டு சான்றிதழ் இல்லாமல் கவனக்குறைவாக வாகனம் ஓட்டினால் 6 புள்ளிகள் குறைக்கப்படும்.

இந்த முறையில் மதிப்பெண் குறைக்கும் முறை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்திற்கமைய, ஓட்டுநர் உரிமங்களில் இருந்து மதிப்பெண்கள் கழிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## பாடசாலை மாணவர்களால்

# போதைப்பொருளற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் போராட்டம்

(முறிகண்டி)

போதைப் பொருளற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் கவனயீர்ப்பு பேரணி நேற்று இடம் பெற்றது. கிளிநொச்சி பாரதி மகாவித்தியாலய பழைய மாணவர்களால் குறித்த கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

சூசைப்பிள்ளை சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி, பாரதிபுரம் மத்திய வீதி ஊடாக பாடசாலை அதிலிருந்து சமூகம் விடுபட வேண்டும் என்பதற்காகவும் இது ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இதன்போது, விழிப் புணர்வு பதாதைகளை ஏந்திய பேரணி முன்னெ



முன்றலை அடைந்ததும் நிறைவடைந்தது.

குறித்த பேரணியில் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதை கண்டித்தும், அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக்கோரியும், டுக்கப்பட்டதுடன், கவனயீர்ப்பும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விழிப்புணர்வு பேரணியில் அனைத்து வயதினரும் ஒருமித்து கலந்துகொண்டமை பாரதிபுரம் பகுதியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, மகஜரும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7,100)

# 31 ஆவது நாள் நினைவஞ்சலி

பிறப்பு : 25.03.1998
இறப்பு : 10.12.2022

அமரர்

## கோபாலகிருஸ்ணன் கவிதாஞ்சன்



கவிதாஞ்சனே உன் ஆத்மா சாந்தி கொள்க

விழிகள் பனித்து நிற்க
விடியல் இல்லாத இரவுகளாய்
சூரியன் காணாத பொழுதுகளாய்
நீண்டு தொடருகின்ற எம் கவலை
உன் ஆரத்தழுவிய விரல்களால்
தலைகோதி விடுகின்ற சுகம் கண்டே
அகம் மலர முகம் புன்னகைக்கும்
என்ன செய்வோம் நாம்
இனி ஏது செய்வோம் யாம்
காலன் கொடியவன்
சிறிதேனும் இரக்கம் இல்லாதவன்
கணநேரத்தில்
எம் கவிதாஞ்சனை காவு கொண்டு விட்டான்
அவனுக்கு புரியவில்லை
அதில் அகப்பட்டு
மனதால் நாமும் செத்து மடிகின்றோம் என்று
உள்ளம் கனத்து நிற்க
உதடுகள் துடித்து நிற்க
அழுதழுது நிதம் தேடுகின்ற எம் விழிகள் காண
கவிதாஞ்சனே
கனவில் எமை நிதம் தாலாட்டி விடு
உன் குரலோசை கேட்டே
எம் மனத்துயர் ஒழிந்து போகட்டும்
கொடிய விதியே இதுவென்று
காலம் எம் மனதை மாற்றி வைக்க
கவிதாஞ்சனே
கவிதை சொல்லி வேண்டுகின்றோம்
உன் ஆத்மா சாந்திகொள்க.

31ஆம் நாள் நினைவில்
குடும்பத்தினர்.
திருமகள் சோதி வீதி, நெல்லியடி, கரவெட்டி.

(C-5753)

# விரைவில் புதிய ஜனாதிபதி மகிந்தவின் சோதிடர் கணிப்பு

(கொழும்பு)

ஜனவரி நடுப்பகுதியின் பின்னர் இலங்கையில் புதிய ஜனாதிபதி பதவியேற்பார் என சோதிடர் சுமணதாச அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சோதிடரான சுமணதாச சில வருடங்களின் முன்னர் சமூக ஊடகங்களில் கடுமையாக கிண்டலிற்குள்ளானவர். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றியடைவார் என சுமணதாச கணித்ததை நம்பி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

சுமணதாச தற்போது மற்றொரு கணிப்பை வெளியிட்டுள்ளார். 93ல் சனி கும்ப ராசிக்கு வந்தபோது முன்னாள் ஜனாதிபதி வீட்டுக்குப்போக வேண்டிய நிலை வந்ததாகவும், 30 ஆண்டுகளுக்குப் பிறகு, ஜனவரி 17 ஆம் திகதி மீண்டும் கும்ப ராசியில் சனி வருவதால் நாட்டில் புதிய ஜனாதிபதி பதவியேற்பார் என தெரிவித்துள்ளார். 55 வருட கால அரசியல் அனுபவம் உள்ள ஒருவரே நாட்டின் புதிய ஜனாதிபதியாக வருவார் என குறிப்பிட்டுள்ளார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள பேரினவாத அரசிற்கு ஆதரவாக செயற்படுவதை இந்தியா நிறுத்த வேண்டும்

## தொல்.திருமாவளவன் வலியுறுத்து

(கொழும்பு)

**சிங்கள, பௌத்த பேரினவாத அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படும் போக்கை கைவிட்டு ஐ.நாவிலும் இதர தளங்களிலும் இந்தியா தமிழர் ஆதரவு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் இந்திய அரசாங்கத்திடம் தொல்.திருமாவளவன் கேட்டுக்கொண்டுள்ளார்.**



ஐ.நா. கூட்டத்தொடர் ஆண்டுக்கு இரண்டு தடவைகள் நடைபெற்றாலும், அதன் மூலம் இதுவரை ஈழத் தமிழர்களுக்கு எவ்விதமான தீர்வும் கிட்டவில்லை என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

13ஆவது திருத்தத்தின் படி, முழுமையான அதிகார பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்த தமிழகத் தலைவர்கள் மூலமாக மாநில, மத்திய அரசாங்கங்களை கோரும் விசேட மாநாடொன்று சென்னையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டின் பின்னர் சென்னை பத்திரிகையாளர் மன்றில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பா.ஜ.க.ஆட்சிக்கு வந்தால் ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் கொள்கை மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் கடந்த எட்டு ஆண்டுகளில் ஈழத் தமிழர்களின் விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், ஐ.நா.வில் சிங்கள,பௌத்த அரசுக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது, இந்தியா அதில் பங்கேற்கவில்லை என்றும் இந்தியா, தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சிங்கள மயமாதலில் இருந்தும் தமிழர்களின் கைகளில் இருந்து பறிபோவதை தடுக்கவும் காணமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கும் தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (நி)


அமரர்.பேராசிரியர் கலாநிதி

ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினம்



பேராசிரியர் கலாநிதி விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கென்னடி
Prof. Dr. Vijjaratnam John Manoharan Kennedy

ஞாபகார்த்த பேச்சுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

இடம்: யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்
காலம்: 10.01.2023 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணி
தலைவர்: திரு.தி.மதிவதனன் அவர்கள்
(அதிபர் யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்)

பிரதம விருந்தினர்
திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்கள்
[ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்,வடமாகாணம்]

சிறப்பு விருந்தினர்கள்
திரு.அ.ஜெகதீஸ்வரன் அவர்கள்
[அதிபர்,யா/இந்துக் கல்லூரி,காரைநகர்]
திரு.அ.சாந்தகுமார் அவர்கள்
[அதிபர்,யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்,காரைநகர்]
திருமதி. கௌரியாம்பாள் அருள்மொழி அவர்கள்
[அதிபர், யா/வியாவில் சைவவித்தியாலயம், காரைநகர்]

கௌரவ விருந்தினர்கள்
திருமதி. நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்
[முன்னாள் இந்து நாகரிகத் துறைத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்]
கலாபூஷணம் பண்டிதர் திரு.மு.சு. வேலாயுதபிள்ளை அவர்கள்
[ஓய்வு நிலை அதிபர்]
கலாபூஷணம் பண்டிதை செல்வி. யோகலட்சுமி சோமசுந்தரம் அவர்கள்
[ஓய்வு நிலை ஆசிரியை]
திரு. நடராசா கணேசமூர்த்தி அவர்கள்
[ஓய்வு நிலை ஆசிரியர்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம்,
விழா ஏற்பாட்டுக் குழுவினர்.

[4169]


# 12,000 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உடனடியாக 12,000 பட்டதாரிகளை சேவையில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான போட்டி பரீட்சை அடுத்த வாரம் நடத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க தெரிவித்தார்.

அத்துடன், இதற்கான வர்த்தமானி அறிவித்தல், விரைவில் வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மின் கட்டண மீள் அதிகரிப்பு இறுதி தீர்மானம் இன்று

(கொழும்பு)

மீண்டும் மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கடந்த அமைச்சரவை கூட்டத்தில் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினால் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

பொது பயன்பாடுகள் ஆணைக்குழு உள்ளிட்ட பல தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டிருந்த பின்னணியில் இந்த யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.

எனினும் அன்றைய தினம் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை இன்று இடம் பெறவுள்ள அமைச்சரவை கூட்டம் வரை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சமாதான நீதவான் பதவி

(கொழும்பு)

அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சமாதான நீதவான் பதவி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறநெறி பாடசாலை ஆசிரியர் பொறுப்பில் பத்து வருட காலத்திற்கும் மேல் சேவை செய்தவர்களுக்கு இந்த பதவி வழங்கப்படவுள்ளது.

மூவாயிரத்து 200 அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சமாதான நீதவான் நியமனத்திற்கான கடிதம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# கலால் திணைக்களத்தின் வருமானம் சென்ற ஆண்டில் அதிகமாம்

(கொழும்பு)

கலால்வரி திணைக்களத்தின் வரலாற்றில் 2022 ஆம் ஆண்டிலேயே அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் 170 பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ள அதேநேரம், இந்த வருடத்தில் 217 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்படுவதாக கலால்வரி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கபில குமார சிங்க குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 200 ஊழியர்களுக்கான பற்றாக்குறை நிலவிய சூழ்நிலையிலும் கடந்த வருடத்தில் அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இதேவேளை, உள்நாட்டு மதுபான உற்பத்திக்கான தரச் சான்றிதழை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, சந்தையிலுள்ள அதிக மதுபான வகைகளுக்கு தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக கலால்வரி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார். (நி)

# கனடா அரசாங்கத்தால் இலங்கைக்கு 3 மில்லியன் டொலர் நிதி உதவி

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்படக் கூடியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கைக்கு கனடா அரசாங்கம் 3மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

கனேடிய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் இணைந்து இந்த உதவியை வழங்கியுள்ளன.

அதன்படி உணவு, சுகாதாரம், போஷாக்கு வசதிகள், குடிநீர் தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை இதன் மூலம் வழங்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூர்யகுமார் ருத்திர தாண்டவம் இலங்கையை வென்றது இந்தியா



இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையிலான 3 ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 20 ஓவர் முடிவில் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 228 ஓட்டங்கள் பெற்றது. சூர்யகுமார் யாதவ் 112 ஓட்டங்கள் விளாசினார்.

இலங்கை தரப்பில் டில்சன் 2 விக்கெட் எடுத்தார். கசுன் ரஜிதா கருணா ரத்ன, ஹசரங்கா டி சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.

இதையடுத்து 229 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை 137 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் இந்திய அணி 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.


இலங்கை அணியில் அதிகபட்சமாக குசல் மெண்டிஸ், தசுன் சனகா தலா 23 ஓட்டங்கள் அடித்தனர்.

இந்தியா தரப்பில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்டுகள் கைப்பற்றினார். ஹர்திக் பாண்ட்யா, உம்ரான் மாலிக், யுஸ்வேந்திர சாகல் தலா 2 விக்கெட் எடுத்தனர்.

3 போட்டி கொண்ட 20 ஓவர் தொடரில் மும்பையில் நடந்த முதல் ஆட்டத்தில் இந்தியா 2 ஓட்டங்களில் வெற்றி பெற்றது. புனேயில் நடந்த 2 ஆவது போட்டியில் இலங்கை அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியில் இந்தியா வெற்றி பெற்றதன் மூலம் தொடரை 2-1 என கைப்பற்றியது. (க)

## மேலதிக சிகிச்சைக்காக மும்பைக்கு மாற்றப்பட்ட ரிஷப்பாண்ட்



இந்திய கிரிக்கெட் வீரர் ரிஷப் பண்ட் கடந்த 30 ஆம் தேதி டில்லியில் இருந்து தனது சொந்த ஊரான உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள ரூர்க்கீ நகருக்கு காரில் சென்ற போது அவரது கார் விபத்துக்குள்ளானது. டில்லி-டேராடூன் தேசிய நெடுஞ்சாலையின் மத்தியில் உள்ள தடுப்பு கம்பியில் கார் மோதி தீப்பிடித்து எரிந்தது.

இதில் ரிஷப் பண்ட் படுகாயமடைந்திருந்தார்.

முதல் கட்ட சிகிச்சைக்கு பிறகு அவர் டேராடூனில் உள்ள மேக்ஸ் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றார்.

நெற்றியில் ஏற்பட்ட காயத்துக்கு உடனடியாக பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்டது.

கால் முட்டு மற்றும் கணுக்காலில் ரிஷப் பண்டுக்கு பலத்த காயம் ஏற்பட்டு தசை நார் கிழிந்திருந்தது. குறிப்பாக, முழங்காலில் ஏற்பட்டு இருக்கும் காயத்துக்கு உடனடியாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது.

எனவே பாதிப்பின் தன்மையை அறிந்து அதற்கு தகுந்த உயர்தர சிகிச்சை அளிப்பதற்காக, அவர் டேராடூனில் இருந்து மருத்துவ வசதியுடன் கூடிய ஏர் ஆம்புலன்ஸ் விமானம் மூலம் மும்பையில் உள்ள கோகிலாபென் திருபாய் அம்பானி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தசைநார் கிழிந்துள்ள முழங்கால் பகுதியில் நேற்று முன்தினம் வெற்றிகரமாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

பிசிசிஐ விளையாட்டு அறிவியல் மற்றும் மருத்துவக் குழுவும் தொடர்ந்து ஆலோசனை வழங்கும் என பிசிசிஐ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரிஷப் பண்ட், அறுவை சிகிச்சைக்கு பிறகு இயல்பு நிலைக்கு திரும்பி போட்டிகளில் பங்கேற்க கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகலாம் என தெரிகிறது. (க)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2747

### சாருதாஷ்




### கணேஷ்




### மதுஷா





### ருத்ரா




### சரித்ரா




### கதீஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவன் கடலில் மூழ்கி உயிரிழப்பு

(ஏறாவூர்)

ஏறாவூர் பிரதேசத்தை சேர்ந்த ஒரு மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

20 வயதுடைய குறித்த மாணவன் தன் சகோதரருடன். குளித்துக்கொண்டிருந்த போது பாரிய அலையினால் இருவரும் அள்ளுண்டு சென்றுள்ளனர்.

பின் மற்றுமொரு அலையினில் இருவரும் கரைக்கு வந்தபோது குறித்த மாணவர் உயிரிழந்திருந்தார்.

இம்மாணவன் எதிர் வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 105 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கை வந்தடைந்த கப்பல்

(கொழும்பு)

105 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு பிரெஞ்சு பயணிகள் கப்பலான லீசெம்லைன் நேற்று முன்தினம் மாலை காலி துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பல் இன்று இலங்கையிலிருந்து புறப்படும். லீ செம்லைன் என்ற இந்த சொகுசு கப்பலை பொனாண்ட் என்ற பிரான்ஸின் நிறுவனம் இயக்கி வருகின்றது. இலங்கையின் சுற்றுலாத் துறையை முன்னேற்றும் வகையில் தொடர்ந்தும் இலங்கைக்கு பல சொகுசு கப்பல்கள் வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்விப்புலத்தில் முப்பத்தினான்கு ஆண்டுகள் சேவையாற்றி மணிவிழாக்காணும் கிளி/அக்கராயன் மகா வித்தியாலய பிரதி அதிபர்

திருமதி.

# வசந்தகுமாரி இராசமூர்த்தி

## அவர்களிற்கு வாழ்த்துக்கள்




### சேவைக்காலம் - 34 வருடங்கள்

| | | |
|---|---|---|
| ஆசிரியராக | - 1988.01.28 | - 1998.04.30 |
| சிரேஷ்ட பகுதித்தலைவராக | - 1993.-01.20 | - 1998.04.30 |
| உதவி அதிபராக | - 1998.05.01 | - 2010 |
| பிரதி அதிபராக | - 2010 | - இன்றுவரை |

**கல்லும் உடையாமல் சிலையும் சிதறாமல்**
**மாணவர்களை அன்பால் செதுக்கிய சிற்பியே-நீங்கள்**
**கல்வியுலகின் பேரரசியாய் கல்வி நிர்வாகத்தின்**
**நிகழ் களமாய் என்றும் எம் மனதில் நிலைத்திருப்பீர்கள்...**

மணிவிழாக்கோலம் பூண்டுள்ள இவ்வேளையில்
உங்களுடைய அர்ப்பணிப்பில் நாமும் இணைந்து
உம் சேவையைத் தொடர்ந்திட உறுதிகொண்டு
உங்கள் அன்பை வாழ்த்திட ஒன்று கூடியுள்ளோம்.
அக்கராயன் நலன்பேண் ஒன்றியம்
வாழ்க! என்றென்றும் நீடுழி! வாழ்க!

(14190)

வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்பேண் ஒன்றியம், பாடசாலைச்சமூகம்,
கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்.


# இராசிபலன்

09.01.2023
மார்கழி 25, திங்கட்கிழமை
துதியை முற்பகல் 9.10 மணிவரை

ஆயிலியம் முழுவதும்
சுபநேரம் 12.32-2.02 மணிவரை
இராகுகாலம் 8.02-9.32 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தராடம்

வளவன்

**மேஷம்**: எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அழகு சாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**ரிஷபம்**: சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், விடமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: கடினமான வேலைகளைக்கூட நயமாகப் பேசி முடித்துக்கொள்வீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்**: நண்பர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, விருப்பங்களை நிறைவேற வழிபாடுகளை நிறைவேற்ற வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்**: எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை ஏற்படலாம், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களில் விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்**: செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, போசனசுகமுண்டு.

**விருச்சிகம்**: வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்தினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**தனுசு**: கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், விரயங்கள் மேலோங்கும் நாள், பொறுமையால் பெருமை காணும் நாள்.

**மகரம்**: மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**கும்பம்**: கூட்டுத்தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மீனம்**: வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, தாழ்ந்த சுபவமுண்டு.

பொறாமையால் அடுத்தவரின் வளர்ச்சியை தவறாகப் பேசக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட

பிரதிப் பொலிஸ் மா அதிபராக

## மஞ்சுள செனரத்ன



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்ன நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்றுக் காலை யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் காலை 8.30 மணியளவில் கடமைகளை பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதுவரை காலமும் கடமையாற்றிய விஜித குணரத்ன ஓய்வு பெற்றதையடுத்து பாராளுமன்ற பிரவுக்கு பொறுப்பதிகாரியாக இருந்த மஞ்சுள செனரத்ன கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். (நி)

காங்கேசன்துறை

## பொலிஸ் அத்தியட்சகர் பொறுப்பேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட காங்கேசன்துறை பிராந்தியத்தின் பொலிஸ் அத்தியட்சகராக எச் எம் நிபுண தெகிகம கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மல்லாகத்தில் உள்ள பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரது அலுவலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்த கொட்டாச்சி ஓய்வு பெற்று சென்றதையடுத்து எச் எம் நிபுண தெகிகம கடமைகளை பொறுப்பேற்றார். (நி-33-104)

## தெல்லிப்பழை மருத்துவமனைக்கு மருந்துகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

14 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் பெறுமதியான புற்றுநோய்க்கான மருந்துகள் லண்டன் அபயம் அறக்கட்டளையின் உதவியில் தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன், மருந்துகளில் ஒரு பகுதியைக் கையளித்தார். (நி)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை 6 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றி பலன் பெறுமாறு ஆலய பரிபாலன சபை கேட்டுக் கொண்டுள்ளது. (நி)

## மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

(யாழ்ப்பாணம்)

யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி. சி.நந்தகுமார் தலைமையில் மணிவிழாவும் சேவை நலன் பாராட்டும் இடம் பெறவுள்ளது. (நி)

### இந்திய அரசின் நிதியுதவியில்

# வடக்கிற்கான புகையிரதப் பாதை நவீனமயப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்



(குருமன்காடு)

இந்திய அரசின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் வடக்குக்கான புகையிரதப் பாதையை நவீன மயப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வு மதவாச்சி புகையிரத நிலையத்தில் இடம்பெற்றது. கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான புகையிரதப் பாதையில் மதவாச்சி தொடக்கம் ஓமந்தை வரையிலான புகையிரதப் பாதைகளை நவீன மயப்படுத்தும் நோக்கோடு இந்திய அரசின் நிதி உதவியில் புனரமைப்பு நடவடிக்கைகள் இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதனால் வடக்குக்கான புகையிரத சேவைகள் அநுராதபுரத்துடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதன் திருத்த வேலைகள் 5 மாதங்களுக்கும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன, இலங்கைக்கான இந்திய துணைத் தூதர் கோபால் பாஸ்லே, இராஜாங்க அமைச்சர் சேம சிங்க, இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத், புகையிரதத் திணைக்கள அதிகாரிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (நி-250)



வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மீளப் பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் ஓரணியில் திரண்டு செயற்படக் கோரி வடக்கு -கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களை ஒன்றிணைத்து கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று நான்காவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

(படங்கள்- சுபேசன், சிவசாந்தன்)

## யாழ்ப்பாண தொகுதிக்கான ஐ.ம.சவின் அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண தொகுதிக்கான பிரதான அலுவலகம் நேற்று நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூர் செட்டித்தெரு பகுதியில் குறித்த அலுவலகம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவால் திறந்து வைக்கப்பட்டது. (நி-33)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**49/4, அராலித்துறை வீதி, வட்டாரம் - 10**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் - 10 அராலித்துறை வீதி இல: 49/4 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **வி.விஜயதெய்வேந்திரம் கைம்பெண் விஜயதேவி** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனம் **விசுவலிங்கம் செல்வரத்தினமும் பெண் கௌரியும்** ஆகியவர்கள் தங்களில் 2ம் பேரின் தந்தையார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை விஜயதெய்வேந்திரத்திற்கு உரியதாகவிருந்தது என்றும் அவர் இறந்த பின்னர் தங்களில் 2ம் பெயருக்கும் சகோதரிக்கும் உரிமையாக வந்தடைந்தது என்றும் 1977ம் ஆண்டளவில் விவாகத்தின் போது தமக்கு சீதனமாக வழங்கப்பட்டது என்றும் அதில் அமைந்துள்ள பழைய வீட்டினை உடைத்து 1ம் பெயரின் உதவியுடனேயே புதிய வீட்டினை அமைத்ததாகவும் குறித்த காணியில் தாங்கள் இருவருக்கும் சமஉரிமையுள்ளது என்றும் குறித்த ஆதனம் இற்றைவரை தமது ஆட்சியிலும் கட்டுப்பாட்டிலுமே இருந்து வருகின்றது என்றும் தமக்குரிய உரிமையை வெளிப்படுத்தும் உரிமை ஆவணங்கள் தம்மிடம் இல்லை என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு மு.க சுப்பிரமணியம் முகதாவில் 16423/05.12.1999 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

**உலோலசிட்டி விநாயகர் ஐக்கிய நாணய சங்கம்** பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2354/24.04.2021 ஆம் இலக்க உறுதியால் குறித்த **விசுவலிங்கம் செல்வரத்தினமும் பெண் கௌரியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாக பெற்று சொந்தமும் உரித்தும் உடையதானது.

குறித்த **உலோலசிட்டி விநாயகர் ஐக்கிய நாணய சங்கம்** ஆதனப் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளது.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **உலோலசிட்டி விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்திற்கு** பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(14166)

தவிசாளர்/செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.


# வாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்ற கும்பல்

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலங்காடு பகுதி வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத குழுவினர், நபர் ஒருவர் மீது வாள்வெட்டினை மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் வாள்களால் வெட்டப்பட்டு காயமடைந்த நபர் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த குலசிங்கம் சூரியகுமார் என்பவரே வாள்வெட்டில் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2023-31.12.2023



**சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாகும் விருச்சிக இராசி வாசகர்களே!**

பிறக்கும் புத்தாண்டு உங்களுக்குப் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை தரும் ஆண்டாக அமையப் போகிறது. தன ஸ்தானத்தில் தொழில் ஸ்தானாதிபதி சூரியனும் லாபாதிபதி புதனும் இணைந்து சஞ்சரித்தபடி ஆண்டு தொடங்குவதால் தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். சனி, குரு மற்றும் ராகு கேது பெயர்ச்சிகளின் விளைவாக வசந்த காலம் உருவாகப் போகிறது.

களால் பலன் உண்டு. வெளிநாட்டில் இருந்தும் அனுகூலத் தகவல் கிடைக்கும்.

**கும்ப - சனி சஞ்சாரம்**

29.3.2023 அன்று சனி பகவான், அவிட்டம் 3 ஆம்பாதத்தில் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கிறார். 24.8.2023 அன்று மகரத்திற்கு வக்கிர இயக்கத்தில் வரும் அவர் 20.12.2023 அன்று மீண்டும் கும்ப இராசிக்குச் செல்கிறார். இடையில் கும்ப இராசியிலும் மகர இராசியிலும் வக்கிர இயக்கத்தில் சஞ்சரித்து நல்ல மாற்றங்களை உருவாக்குவார். கும்பச் சனி உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனியாக அமைகிறது. அதனால் கவலைப்படத் தேவையில்லை. சனி பகவான் உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானத்திற்கும் அதிபதி என்பதால் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது எண்ணற்ற நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிவகுப்பார்.

பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய இடம் வாங்கும் யோகம் உண்டு. கட்டிய வீட்டை பழுது பார்க்கும் முயற்சி, கார், வண்டி, வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டாலும் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் உடல்நலத்தை சீராக்கிக் கொள்ளலாம்.

ஆர்வம் காட்டுவீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத விதத்தில் பதவிகள் தானாக வரலாம். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்கள் மற்றும் நவீன




பொருட்கள் வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். வெளிநாட்டு முயற்சியில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணம், பெற்றோரின் மணிவிழா, புதுமனை புகுவிழா, பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் போன்றவற்றை நடத்தி மகிழும் வாய்ப்பு உண்டு

**ராகு- கேது பெயர்ச்சி**

8.10.2023 அன்று ரேவதி நட்சத்திரம் 4 ஆம் பாதம் மீன இராசியில்

[illegible] கவனமுடன் இருப்பது அவசியம். எதைச் செய்தாலும் அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளைக் கேட்டும் ஆன்மிகப் பெரியவர்களின் ஆசிகளைப் பெற்றும் செய்வது நல்லது. புதியவர்களை நம்பி தொழிலில் ஈடுபடுவது அவ்வளவு நல்லதல்ல. உத்தியோகத்தில் உள்ளவர்கள், மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வதன் மூலமே நன்மைகளை அடையலாம். குடும்பச் சுமை கூடும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

சதுர்த்தி விரதமிருந்து ஆனைமுகப் பெருமானை வழிபட்டு வந்தால் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**சனி மற்றும் குருவின் வக்கிர காலம்**

27.6.2023 முதல் 23.8.2023 வரை கும்ப இராசியிலும் 24.8.2023 முதல் 23.10.2023 வரை மகர இராசியிலும் சனி பகவான் வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 3, 4 இற்கு அதிபதியானவர் சனி. இக்காலத்தில் உடன்பிறப்புகளின் அனுசரிப்புகள் கொஞ்சம் குறையலாம். கட்டடப் பணியில் தாமதம் ஏற்படும். உத்தியோகம்,

## ஒளிமயமான எதிர்காலம் உருவாக நண்பர்கள் வழிகாட்டுவர்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**புத்தாண்டு கிரக நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் வக்கிரம் பெற்று ரிஷப இராசியில் சஞ்சரிக்கிறார். அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவது யோகம் தான். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தனவரவு தாராளமாக வந்து சேரும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். தன ஸ்தானத்தில் சூரியன், புதன் சஞ்சரிக்கிறார்கள். சகாய ஸ்தானத்தில் சனியோடு சுக்கிரன் வீற்றிருக்கிறார். 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் இராசியைப் பார்க்கிறார். ஜீவன ஸ்தானத்தில் ராகு சந்திரனோடு கூடியிருக்க 12 இல் கேது இருந்தபடி புத்தாண்டு தொடங்குகிறது.

ஆண்டு தொடக்கத்தில் குருவின் பார்வை 1, 9, 11 ஆகிய இடங்களில் பதிவதால் மிஞ்சும் பலன் தரும் விதம் தொழிலில் இலாபம் கிடைக்கும். உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். வருங்காலத்தை வளமாக்கிக் கொள்ள எடுத்த முயற்சிகள் வெற்றியாகும்.

அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். ஒளிமயமான எதிர்காலம் உருவாக நண்பர்கள் வழிகாட்டுவர். பணிபுரியும் இடத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். பாகப்பிரிவினை

**மேஷ - குரு சஞ்சாரம்**

22.4.2023 அன்று குரு பகவான், அசுவதி நட்சத்திரம் முதல் பாதத்தில் மேஷ இராசிக்கு பெயர்ச்சியாகிப் போகிறார். அவரது பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. குரு பார்க்கக் கோடி நன்மை என்பதற்கேற்ப, இந்த மூன்று இடங்களின் ஆதிபத்தியம் வாயிலாக உங்களுக்கு முத்தான பலன்கள் வந்து சேரப் போகிறது. பொதுவாகக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

எடுத்த காரியங்களை எளிதில் முடிப்பீர்கள். இதயம் மகிழும் விதத்தில் வரன்கள் வந்து இல்லத்தில் சுபகாரியம் நடந்தேறும். தொழில் வெற்றி நடைபோடும். வருமானம் பலவழிகளிலும் வந்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் செயல் ஸ்தானம் பலமடைகிறது. எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி என்ற நிலை உருவாகும். குடும்பத்தில் ஒருவர் மட்டுமன்றி உடன் இருப்பவர்களுக்கும் வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் பெருகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில்

ராகுவும் சித்திரை நட்சத்திரம் 2 ஆம் பாதம் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். ராகு பகவான் 5 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டு. புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி தரும். லாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். கூடுதல் லாபம் தொழிலில் கிடைக்கும். மூத்த சகோதரர்களால் முன்னேற்றம் உண்டு. பழுதடைந்த வீட்டைப் பராமரிக்கும் எண்ணம் மேலோங்கும். புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பணிபுரிபவர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

இப்புத்தாண்டில் 4 முறை செவ்வாய் - சனி பார்வை ஏற்படுகிறது. எனவே

தொழிலில் இடமாற்றங்களும் இலாகா மாற்றங்களும் வரலாம். 12.9.2023 முதல் 19.12.2023 வரை மேஷ இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. எனவே இக்காலத்தில் வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்காது. குடும்ப முன்னேற்றத்தைக் கருதி நீங்கள் நல்லது செய்தாலும் இல்லத்தில் உள்ளவர்கள் நன்றி காட்ட மாட்டார்கள். இக்காலத்தில் குருவிற்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்பும் பாசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. குறிப்பாக அவர்களின் திருமண காரியங்கள் சிறப்பாக நடைபெறும். வெளிநாடு சென்று பணிபுரிய நினைப்பவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும். சொந்தங்கள் ஆச்சரியப்படும் அளவு உங்கள் முன்னேற்றம் இருக்கும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 71





"அப்படியானால் மிகவும் நல்லதாய்ப் போயிற்று. நாம் எல்லோரும் சேர்ந்து தனித்தனியே நம் கைவரிசையைக் காட்ட வேண்டியது தானே? இந்த வானதியினால் முடிகிற காரியம் நம்மால் முடியாது போய்விடுமா? அவளிடம் உள்ள மாயப் பொடி நம்மிடமும் இல்லையா என்ன?" என்றாள் தாரகை. இப்படியெல்லாம் இந்தப் பெண்கள் பேசியதற்கு ஆதாரமான நிகழ்ச்சி என்னவென்பதை வாசகர்களுக்கு இப்போது தெரிவிக்க விரும்புகிறோம்.

**பதினாறாம் அத்தியாயம்**
**அருள்மொழிவர்மர்**

இன்றைக்குச் சுமார் (1950இல் எழுதப்பட்டது) 980 ஆண்டுகளுக்கு முன்னால் கோ இராசகேசரிவர்மர் பராந்தக சுந்தர சோழ மன்னர் தென்னாட்டில் இணையில்லாத சக்கரவர்த்தியாக விளங்கி வந்தார். நம் கதை நடக்கும் காலத்துக்குப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு இவர் சிங்காசனம் ஏறினார்.

சென்ற நூற்றாண்டுகளாகச் சோழர்களின் கை நாளுக்கு நாள் வலுத்து வந்தது. சோழ சாம்ராஜ்ஜியம் நாலா திசையிலும் பரவி வந்தது. எனினும் சுந்தர சோழர் பட்டத்துக்கு வந்த சமயத்தில் தெற்கேயும் வடக்கேயும் விரோதிகள் வலுப் பெற்றிருந்தார்கள்.

சுந்தர சோழருக்கு முன்னால் அரசு புரிந்த கண்டராதித்தர் சிவ பக்தியில் திளைத்துச் "சிவஞான கண்டராதித்தர்" என்று புகழ் பெற்றவர். அவர் இராஜ்ஜியத்தை விஸ்தரிப்பதில் அவ்வளவாகச் சிரத்தை கொள்ளவில்லை. கண்டராதித்தருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த அவருடைய சகோதரர் அரிஞ்சயர் ஓர் ஆண்டு காலந்தான் சிம்மாசனத்தில் இருந்தார். அவர் தொண்டை நாட்டிலுள்ள "ஆற்றூரில் துஞ்சி" பின்னர், அவருடைய புதல்வர் பராந்தக சுந்தர சோழர் தஞ்சைச் சிம்மாசனம் ஏறினார்.

பேரரசர் ஒருவருக்கு இருக்க வேண்டிய எல்லாச் சிறந்த அம்சங்களும் சுந்தர சோழ சக்கரவர்த்தியிடம் பொருந்தியிருந்தன. போர் ஆற்றல் மிக்க சுந்தர சோழர் தம் ஆட்சியின் ஆரம்பத்திலேயே தென் திசைக்குப் படையெடுத்துச் சென்றார். சேவூர் என்னுமிடத்தில் சோழ சைன்யத்துக்கும் பாண்டிய சைன்யத்துக்கும் பெரும் போர் நடைபெற்றது. அச்சமயம் மதுரை மன்னனாயிருந்த வீரபாண்டியனுக்குத் துணை செய்வதற்காகச் சிங்கள நாட்டு அரசன் மகிந்தன் ஒரு பெரிய சேனையை அனுப்பியிருந்தான்.

சோழர்களின் மாபெரும் வீர சைன்யம் பாண்டியர்களுடைய சேனையையும் சிங்கள நாட்டுப் படையையும் சேவூரில் முறியடித்தது. வீரபாண்டியன் படையிழந்து, முடியிழந்து, துணையிழந்து, உயிரை மட்டும் காப்பாற்றிக் கொண்டு போர்க்களத்திலிருந்து ஓடித் தப்பித்தான்.

பாலை நிலப் பகுதியொன்றின் நடுவில் இருந்த மலைக் குகையில் ஒளிந்து கொண்டு காலங்கழிக்கலானான். சேவூர்ப் போரில் ஈழத்துப் படை அநேகமாக நிர்மூலமாகி விட்டது. எஞ்சிய வீரர்கள் சிலர் போர்க்களத்தில் புகழையும் வீரத்தையும் உதிர்த்துவிட்டு, உயிரை மட்டும் கைக்கொண்டு ஈழநாட்டுக்கு ஓடிச் சென்றார்கள். இவ்விதம் பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் நடக்கும் போர்களில் சிங்கள மன்னர்கள் தலையிட்டுப் பாண்டியர்க்கு உதவிப் படை அனுப்புவது சில காலமாக வழக்கமாய்ப் போயிருந்தது. இந்த வழக்கத்தை அடியோடு ஒழித்து விடச் சுந்தர சோழ சக்கரவர்த்தி விரும்பினார். ஆகையினால் சோழ சைன்யம் ஒன்றை இலங்கைக்கு அனுப்பிச் சிங்கள மன்னர்களுக்குப் புத்தி கற்பிக்க எண்ணினார்.

கொடும்பாளூர்ச் சிற்றரசர் குடும்பத்தைச் சேர்ந்த பராந்தகன் சிறிய வேளான் என்னும் தளபதி யின் தலைமையில் ஒரு பெரும் படையைச் சிங்களத்துக்கு அனுப்பினார். துரதிர்ஷ்வசமாக சோழர் படை சிங்களத்துக்கு ஒரே தடவையில் போய்ச் சேரவில்லை. அதற்குத் தேவையான கப்பல் வசதிகள் இல்லை.

முதல் தடவை சென்ற சேனை முன் யோசனையின்றித் துணிந்து முன்னேறத் தொடங்கியது. மகிந்த ராஜனுடைய தளபதி ஸேனா என்பவனின் தலைமையில் சிங்களப் படை எதிர்பாராதவிதத்தில் வந்து சோழப் படையின் பகுதியை வளைத்துக் கொண்டது. (தொடரும்)

## சிறுவர் அரங்கம்

# பரமார்த்த குரு கதைகள்

## அடை காப்பது யார்?

(நேற்றைய தொடர்ச்சி)

மட்டியும் மடையனும் மடத்திலிருந்து போன பிறகு வரப் போகிற குதிரை முட்டையைப் பற்றியும் அதிலிருந்து பெறப் போகும் குதிரையைப் பற்றியும் கற்பனையாக ஏதேதோ எண் ணிக் கொண்டு மகிழ்ச்சியில் மிதந்தார்கள் மற்ற நால்வரும்.


"நல்ல முட்டையாகப் பார்த்து வாங்கி வருவார்கள். அதனால் தான் மட்டியோடு மடையனையும் அனுப்பியிருக்கிறோம்" என்று தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் பரமார்த்த குரு. "நல்ல முட்டையிலிருந்து நல்ல ஜாதிக்குதிரை பிறக்கும்" என்று சந்தோஷமாகச் சொன்னான் மிலேச்சன்.

"எல்லாம் சரி. அந்த முட்டையை அடைகாத்துத் தானே பக்குவமடையச் செய்ய வேண்டும்? அப்புறம் தானே அதிலிருந்து குட்டியை வெளிக் கொணர முடியும்? ஆமாம்... அதை யார் அடைகாப்பது?" என்று தன் ஐயத்தைக் கிளப்பினான் மூடன்.

"அவர்கள் பெரிய முட்டையைப் பார்த்து வாங்கி வரப் போகிறார்கள். அதை ஒருவர் மாத்திரம் இரு கைகளாலும் கட்டி அணைக்கவே முடியப் போவதில்லை. கோழிகளை விட்டு அடைகாக்க வைக்கலாம் என்றால் அடேயப்பா... எத்தனை கோழிகள் தேவைப்படும்? பத்துப் பதினைந்து கோழிகளாவது வேண்டியிருக்குமே! அவ்வளவும் என்ன விலையாகும்?" என்று கவலையில் ஆழ்ந்தான் பேதை.

"அது சரி, அவ்வளவு பெரிய முட்டையைப் பத்துப் பதினைந்து கோழிகள் ஒற்றுமையாக அடைகாக்குமா? ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டு பறந்து போய்விடாதா? இதையெல்லாம் யார் பாதுகாப்பது?" என்று தன் ஐயத்தை வெளியிட்டான் மிலேச்சன்.

இவ்வாறு மூன்று சிஷ்யர்களும் பரமார்த்த குருவும் சிறிது நேரம் பலமாக யோசித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியாக குருநாதருக்கு ஒரு முடிவு தோன்றி விட்டது.



"நம்மில் யாராவது ஒருவன் தான் குதிரை முட்டையை அடை காத்து ஆக வேண்டும். வேறு வழியேயில்லை!" என்று பொதுவாகக் கூறி விட்டுப் பின் ஒவ்வொருவராக உங்களில் யார் அடைகாப்பது என்று தனித்தனியே விசாரித்தார்.

மூடனைக் கேட்ட போது அவன் சொன்னான் "சுவாமி, நான் தான் தினந்தோறும் நதிக்குச் சென்று நமக்கு வேண்டிய தீர்த்தமெல்லாம் கொண்டு வருவது வழக்கம். காட்டுக்குப் போய் எரி பொருளைக் கொண்டு வந்து சேர்ப்பதும் என் பணி தானே! இப்படியிருக்க எனக்கு அடை காக்க நேரம் ஏது?"

பேதையைக் கேட்ட போது அவன் சொன்னான் "குருவே! நம் எல்லோருக்கும் உணவு தயாரிக்கும் சமையல் காரியங்களை நான் தானே செய்தாக வேண்டும். வாய்க்கு ருசியாக வகை வகையாகக் காய் கறிகளைப் பக்குவமாகச் சமைத்து உணவு வகைகளைத் தயார் செய்யும் பணி மட்டுமா? எல்லோருக்கும் குளிக்கவும் குடிக்கவும் வெந்நீர் வைத்துத் தரும் வேலையும் எனக்கு இருக்கிறதே? அடை காக்க எனக்க நேரம் இல்லையே!"

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

- சிம்மன்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூட்டமைப்பு தனித்தொழிய தமிழ்க் கட்சிகள் பறந்தற்றே

வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் கொண்டுபோன கதையாக நம் தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைமை வந்துவிட்டது.

ஆம், இதுகாறும் ஒரு குறிப்பிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் விரும்பியோ விரும்பாமலோ ஒற்றுமைப்பட்டு இருந்தன.

ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் கூட்டமைப்பு கலைந்து போகின்ற அளவில் நிலைமை வந்துவிட்டது.

ஆம், தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதே பொதுவான கோரிக்கை. இந்தப் பொதுவான கோரிக்கையை சிங்கள ஆட்சியாளர்களும் விடுத்த வண்ணமுள்ளனர்.

எனினும் எதிர்பார்ப்பை உடைத்தெறிவது போல உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டமைப்பு கைவிடப்பட்டு, தமிழரசுக் கட்சி தனியாகப் பறந்து செல்வதற்குத் தயாராகிவிட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் இந்த முடிவு கூட்டமைப்பில் இடம்பெற்றிருந்த ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

என்ன செய்வது பருவத்தே பயிர் செய் என்ற தத்துவத்தை இந்தக் கட்சிகள் நினைக்கத் தவறியதன் விளைவுதான் இது.

தவிர, தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்திருந்து தங்களின் அரசியல் நலனைக் கவனிப்பதுதான் புத்திசாலித்தனம் என்று நினைத்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இப்போது பலத்த அனுபவத்தைப் பெற்றிருக்கும் எனலாம்.

ஆம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம்பெற்றிருந்த தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பை விட்டு விலகியபோது, அவை முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் கூட்டமைப்பில் தொடர்ந்தும் பங்காளிக் கட்சிகளாக இருந்தவர்கள் மௌனம் சாதித்தனர்.

அதன் எதிர்வினையாகவும் கூட்டமைப்பின் சமகால நிலை அமைகிறது.

எதுஎவ்வாறாயினும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களின் நலனைக் கவனிக்கத்தக்கவாறு உயர்மட்ட அரசியல் குழுவை உள்ளடக்கியதான பொது அமைப்பொன்றை பேணிப் பாதுகாக்கத் தவறியதன் விளைவை இப்போது அனுபவிக்கின்றனர்.

இந்த அனுபவிப்பில் இருந்து நாம் தப்பிவிட்டோம் என்று நினைப்பவர்களுக்கு அடுத்துவரும் பொதுத் தேர்தல் தக்கபாடம் புகட்டும் என்பது சர்வநிச்சயம்.

இதுதவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டில் இருந்த தாய்ப்பறவை பறக்கத் தலைப்பட்டுவிட்டது.

இனிக் குஞ்சுகள் கூண்டில் - கூட்டமைப்பில் இருப்பது அர்த்தமற்றது என்றுணர்ந்து தத்தம் சிறகுகளை விரிக்கத் தலைப்படும்.

அவை தாய்ப்பறவை போல உயரப் பறக்க முடியாவிட்டாலும் இரைதேடும் பறவைகளாக அவை பறக்கும்போது, அவற்றின் சிறகுகளின் அசைவு தனித்துப் பறப்பதற்காக மட்டுமல்ல. தாய்ப்பறவை மீது குற்றஞ்சாட்டுவதையும் நோக்காகக் கொண்டிருக்கும்.

என்னவோ ஐயன் வள்ளுவனின் கருத்தில் கூறுவதாயின், கூட்டமைப்பு தனித்தொழிய தமிழ்க் கட்சிகள் பறந்தற்றே... எனலாம்.

# அமெரிக்காவில் பணியாற்ற 550 பேருக்கு சந்தர்ப்பம்

(கொழும்பு)

அமெரிக்காவில் பணியாற்றுவதற்கு 550 இலங்கையர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக வோஷிங்டன் நகரில் உள்ள இலங்கைத்தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 250 தாதியர்கள், 100 இரசாயன ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலாளர்கள், 200 தாதி உதவியாளர்கள் ஆகியோருக்கு அமெரிக்காவில் பணியாற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது. (4-7)

# ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண அலுவலகம் நேற்றையதினம் நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது. நல்லூர் செட்டித் தெரு பகுதியில் குறித்த அலுவலகம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவால் திறக்கப்பட்டது.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளருமான உமாச்சந்திரா பிரகாஷ், யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட அமைப்பாளர் விஜய்காந்த், யாழ் மவட்ட அமைப்பாளர் கு.மதன்ராஜ், யாழ்ப்பாண தொகுதி பிரதம அமைப்பாளர் ஜெயேந்திரன், தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவ தியாகேந்திரன், கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-7)

## சாவகச்சேரியில்
# சுகாதார உத்தியோகத்தர் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சுகாதார ஊழியராக கடமையாற்றும்47வயதான தாயொருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திடீரென உயிரிழந்துள்ளார்.

காலை வேளையில் தனது வீட்டில் சமையல் பணிகளை முடித்த பின்னர் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு குறித்த ஊழியர் உயிரிழந்துள்ளார்.

கைதடி தெற்கு கைதடிப் பகுதியைச் சேர்ந்த 47 வயதான சி.கஜனி என்ற சுகாதார ஊழியரே இவ்வாறு திடீர் மரணமடைந்துள்ளார். உயிரிழந்தவரது சடலம் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த ஊழியர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (4)

# தற்போது நாட்டுக்கு தேர்தல் அவசியமில்லை
## ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களால் நாட்டுக்கு எந்தவிதமான சேவைகளும் ஆற்றப்படுவதில்லை என்பதால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வேண்டாமென ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு தேர்தல் அல்ல உணவே இப்போது அவசியம். IMF உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் ஏன் இலங்கைக்கு உதவுவதில்லை? சட்டரீதியாக மக்கள் ஆணையைக் கொண்ட அரசாங்கம் ஒன்று அமைக்கப்படாமையே இதற்குக் காரணம். எனவே, மக்கள் ஆணையுடன் கூடிய புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான தேர்தலே இப்போது அவசியம் எனவும் தெரிவித்தார். (4-7)

# வெளிநாட்டு நன்கொடையாளர்கள் என்னையே நம்புகின்றனர் - சஜித்

(கொழும்பு)

வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இலங்கையின் மற்றைய தலைவர்களை விட தன்னை நம்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று தெரிவித்துள்ளார்.

நுகேகொட மஹாமாயா பாலிக வித்தியாலயத்தில் பஸ் ஒன்றை அன்பளிப்பு செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சஜித்பிரேமதாச, வெளிநாட்டு நன்கொடையாளர்களை நம்பிக்கையூட்டியதன் மூலம் அவர்களின் நம்பிக்கையை பெற முடிந்ததாக தெரிவித்தார்.

வெளிநாட்டு நன்கொடையாளர்களை நம்ப வைக்கும் திறன்களைப் பயன்படுத்தி பாடசாலை மாணவர்களுக்காக மேலும் பல திட்டங்களை செயல்படுத்துவேன்.

எதிர்காலத்தில் பாடசாலை செல்லும் ஒவ்வொரு பிள்ளையும் கணினியை சொந்தமாக வைத்திருப்பார்கள்.

எனவே வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கு சிறந்த நபர் யார் என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். தற்போதைய ஜனாதிபதி வெளிநாட்டு உதவியை நாட்டுக்கு கொண்டு வருவார் என்று அனைவரும் நினைத்தார்கள். ஆனால் அவர் தோல்வியுற்றவர் என்பதை நிரூபித்துள்ளார். என்று அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** ஒமினி அலுவலகம், ஒமினி அலுமினிய தொழிற்சாலை, பரந்தன் நீர்வேலி, கரந்தன், போயிட்டி, பொக்கணை, ஊரெழு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேச்தில் கனகராயன்குளம், ஆலங்குளம், (புதுவிளான்), கருப்புக்குத்தி இராணுவ முகாம், குறிச்சுட்டான்குளம், பரசன்குளம், புதுகோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர் கிராமம், புதுவிளான்குளம் சிவன் கோவில், விக்னகுளம் ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும்.

# இலங்கை - தாய்லாந்து பேச்சுவார்த்தை இன்று

(கொழும்பு)

நாட்டின் ஏற்றுமதியினை மேம்படுத்தும் நோக்கில் இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான 3ஆம் கட்ட வர்த்தக பேச்சுவார்த்தை இன்று ஆரம்பமாகவுள்ளது.

7 துறைகள் தொடர்பில், இந்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, வர்த்தக பொருள், வர்த்தக சேவை, முதலீடுகள், சுங்க மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்ட ஏழு அம்சங்களின் கீழ் குறித்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது. (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றி நெல்லின் தாக்கத்தால் விவசாயம் கைவிடப்படும் அபாயம்

## கட்டுப்படுத்த துறைசார் அதிகாரிகளிடம் கோரிக்கை

(அக்கராயன்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் பன்றி நெல்லின் தாக்கம் அதிகரித்து வருவதால் பல விவசாயிகள் பொருளாதார ரீதியாக தாக்கம் அடைந்துள்ளார்கள் என கிளிநொச்சி இரணைமடுக்குள கமக்கார அமைப்புகளின் சம்மேளன செயலாளர் மு.சிவமோகன் தெரிவித்தார்.**

மேலும் தெரிவித்ததாவது, இக்களை நெல்லினை கட்டுப்படுத்த இயலாத நிலையில் சில வயல் நிலங்கள் நெற்செய்கை மேற்கொள்ள இயலாது கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை பயிர் நிலையில் இனங்காண முடியாததால் கையால் பிடுங்கியும் கட்டுப்படுத்த இயலாது. பன்றி நெல் கதிர் வந்த பின்னர் கைகளால் பிடுங்கி கட்டுப்படுத்துவது மிக கடினமான காரியமாகும். அடுத்து வரும் போகத்திலும் தொடர்ந்து வரும் நிலையும் உள்ளது. தற்போதைய மனித வலுக் குறைவு மற்றும் மனித வலுவிற்கான அதிக கூலிகள் என்பவற்றால் இக்களை நெல்லினை கட்டுப்படுத்துவது இயலாதுள்ளது.

இதனை கட்டுப்படுத்த இரசாயன நாசினிகள் எவையும் இது வரை அறிமுகப்படுத்தப்படவில்லை. தற்போது இக்களை நெல் பயிரிடும் நெல்லுடன் கலப்புருவாக்கி உதிர்ந்து நிலத்தில் கொட்டி விடுகின்றது. அத்தோடு விரைவாக சரிந்து வீழ்ந்து விடுவதால் பயிரிடப்பட்ட நெல்லையும் அழித்து விடுகின்றது.

இதனை கட்டுப்படுத்த இரண்டு அல்லது மூன்று போகங்களுக்கு உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடாமல் வயலை தொடர்ந்து உழுது கட்டுப்படுத்த வேண்டும். இது விவசாயியை பொருளாதார ரீதியாகவும் வாழ்வாதார ரீதியாகவும் பெரும் பாதிப்படைய செய்து விடும். எனவே இவ்விடயத்தில் துறைசார் விவசாய ஆராய்ச்சியாளர்கள் கூடுதல் அக்கறை கொண்டு இப்பன்றி நெல்லையும் கட்டுப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என விவசாய சமூகம் எதிர் பார்க்கின்றது. பன்றி நெல்லும் பாதீனமும் எமது மாவட்டத்தின் விவசாய செயற்பாட்டினை முற்றாக அழித்து விடும் அபாயமுள்ளது எனவும் தெரிவித்தார். (நி-350)

## மன்னார் மாவட்ட அரசியல் நிலவரம் தொடர்பில் ஆராய்வு



(மன்னார்)

ஐக்கிய மக்கள் சக்தி மன்னார் மாவட்ட அரசியல் நிலவரம் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான ஆலோசனை தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மன்னாரில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன, உமா சந்திர பிரகாஷ் மற்றும் வவுனியா, மன்னார் மாவட்ட கட்சியின் இணைப்பாளர்கள் உட்பட ஐக்கிய மக்கள் சக்தி, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (நி-285)

## செயலிழந்துள்ள குடிநீர் திட்டத்தை செயற்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் அமதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஆரோக்கியபுரம் கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஒன்று தற்போது செயலிழந்துள்ளது.

இலங்கை கடற்படையினரால் வழங்கப்பட்ட இந்த திட்டத்தால் 80 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினை பெற்று பயனடைந்து வந்த நிலையில் கடந்த ஐந்து மாதங்களாக குறித்த குடிநீர் திட்டம் செயலிழந்து காணப்படுகின்றது.

இக்குடிநீர் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆரோக்கியபுரம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

## கசிப்பு காய்ச்சிய இருவர் பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பனில் கசிப்பு காய்ச்சிய நிலையில் இருவர் பொது மக்களினால் மடக்கி பிடிக்கப்பட்டதுடன் கசிப்பு, உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது. கசிப்பு காய்ச்சப்படுவதாக பொது மக்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஒன்று திரண்ட மக்கள் கசிப்பு காய்ச்சிய இருவரை மடக்கி பிடித்து உபகரணங்களையும் கைப்பற்றியதுடன் பூநகரி பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் முக்கொம்பன் கிராமத்தில் போதைப் பொருட்களை கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களை தடுக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (நி-350)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 700 | 550 | 680 | 600 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 300 | 340 | 300 | 350 |
| தக்காளி | 200 | 160 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 200 |
| கோவா | 100 | 140 | 170 | 150 |
| கரட் | 200 | 250 | 250 | 300 |
| பூசணி | 140 | 140 | 150 | 200 |
| புடோல் | 280 | 300 | 200 | 280 |
| வாழைக்காய் | 150 | 140 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 600 | 600-900 | 1200 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 200 | 240 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 250 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 600 | 450 | 450 | 500 |
| லீக்ஸ் | 450 | 300 | 280 | 350 |
| பீற்றூட் | 450 | 500 | 500 | 500 |
| கறிமிளகாய் | 700 | 800 | 700 | 700 |
| முருங்கைக்காய் | -- | 1200 | 1400 | 2000 |
| போஞ்சி | 500 | 400 | 450 | 480 |
| கத்தரிதம்புள்ள | 600 | 350 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 140 |
| தேசிக்காய் | 100 | 120 | 130 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 30-120 | 70-110 |
| இராசவள்ளி | 350 | 350 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 600 | 700 | 300 | 800 |
| முள்ளங்கி | 100 | 140 | 160 | 240 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 40 | 40 | 60 |
| ஈரப்பலா | 120 | 140 | -- | 200 |

## கடலட்டைப் பண்ணைக்கு எதிராக போராடும் மக்களை சந்தித்த அமைச்சர்

(முறிகண்டி)

கடலட்டை பண்ணைக்கு எதிர்ப்பு தெரிவித்து 100 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் சந்தித்தார்.

இதன்போது அமைச்சரிடம் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலந்துரையாடினர். கடலட்டை பண்ணை அமைப்பதற்கு தாம் எதிர்ப்பு இல்லை எனவும் தாம் தொழில் செய்யும் பகுதியை விடுவித்து தமது தொழிலிற்கு பாதிப்பு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

குறித்த கோரிக்கையை எழுத்து மூலம் தருமாறும், அது தொடர்பில் பரிசீலிப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (நி-100)

## கால்நடைகளின் நடமாட்டத்தால் அதிகரிக்கும் வீதி விபத்துக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் முதன்மை வீதியில் கால்நடைகள் நடமாடித் திரிவதனால் விபத்துகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.

கால்நடைகளை முதன்மை வீதிக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டாம் என பொலிஸாரால் அறிவிக்கப்பட்ட நிலையில் பெருமளவிலான கால்நடைகள் அக்கராயன், வன்னேரிக்குளம் வீதியில் நடமாடித் திரிவதனால் விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன.

இதனை விட பாலங்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கையினை அடிக்கடி வீதியில் திரிகின்ற கால்நடைகள் அழித்து வருவதாகவும் திருமுறிகண்டி தொடக்கம் வன்னேரிக்குளம் வீதி வரை நடமாடுகின்ற கால்நடைகளை பிற இடங்களுக்கு கொண்டு சென்று மேய்ச்சலில் ஈடுபடுத்துவதன் மூலமே விபத்துகளை தவிர்ப்பதுடன் பயிர்ச் செய்கைகளையும் பாதுகாக்க முடியும் என பொதுமக்கள் தெரிவித்தனர். (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின்...

இடம்பெறவுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்த அகழ்வு பணிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## தவறான...

ஜெயக்குமார் பாணுதன் (வயது- 21) என்பவராவார்.

திருமண மண்டபம் ஒன்றில் வேலை பார்த்துவரும் மேற்படி இளைஞர் வேலை முடிந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு 11 மணியளவில் வீட்டுக்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கதவைத் திறந்தவர் திரும்பி வராததை அடுத்து பார்த்தபோது தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட அவரை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தபோது அவர் ஏற்கெனவே மரணம் அடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன்போது கொரோனா தொற்று காரணமாக சகோதரி ஒருவர் உயிரிழந்ததாகவும் அவரின் சடலம் வீட்டிற்கு கொண்டுவரப்படாமல் நேரடியாக மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், அவர் அதனை எண்ணியே கவலையடைந்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (4-7,60)

## ஆசியாவின்...

நல்லூர் கந்தசுவாமி கோவில் மற்றும் பரந்த வெள்ளை காலனித்துவ கால யாழ்ப்பாண நூலகம் இரண்டும் விதிவிலக்கானவை.

வாழைப்பழங்கள் மற்றும் மாம்பழங்கள், காய்கறிகள், ஊறுகாய்கள் மற்றும் அரிசி உணவுகளுடன் சேர்த்து, மலிவு உணவுகள் யாழில் பிரபலமானவை என அமெரிக்க சிஎன்என் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.(ம-7)

## பாராளுமன்ற...

படைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு பிறப்பித்த உத்தரவின் பிரகாரம், இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரங்களை www.parliament.lk என்ற பாராளுமன்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## ரணிலுக்கும்...

நாயக்கவின் கொள்கைகளை செயற்படுத்த முனைந்ததால் முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. இளம் தலைமுறையினர் பண்டாரநாயக்கவின் கொள்கைகளை அறியாமல் இருப்பது பிறிதொரு பிரச்சினையாகும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பண்டாரநாயக்கவின் 124 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பண்டாரநாயக்கவின் கொள்கைகளை எனது அரசியல் கொள்கையுடன் ஒன்றிணைத்து, பண்டாரநாயக்கவின் கொள்கைக்கு மாற்றுக் கொள்கையுடன் பயணித்ததால் முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. இதனைவிடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் எனக்கும் நல்லாட்சி அரசாங்கத்தில் தனிப்பட்ட முரண்பாடுகள் ஏதும் காணப்படவில்லை. கொள்கை ரீதியில் பிரச்சினைகள் காணப்பட்டன என மேலும் தெரிவித்தார். (4-7)

## கோட்டாவின்...

குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் - பொல்பிட்டிகமவை சேர்ந்த 25 வயதான கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் மிரிஹானை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்துக்கு செல்லும் வீதி என்பதால் அங்கு குறித்த பாதுகாப்புக் கடமை 24 மணி நேரமும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

இந் நிலையில் பொலிஸ் கான்ஸ்டபிள் கடமையில் ஈடுபட்டிருந்தபோது உறங்கி விட்டதாகவும் பொலிஸ் சார்ஜன்ட் அது தொடர்பில் அவருக்கு கடமையில் அக்கறையுடன் செயற்படுமாறு ஞாபகப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்துள்ள பொலிஸ் கான்ஸ்டபிள், பொறுமை இழந்து, சார்ஜன்ட்டை நோக்கி தனது துப்பாக்கியை குறிவைத்ததாகக் கூறப்படுகிறது, ஆனால் எந்தவொரு சேதமும் நிகழும் முன், குறித்த ஆயுதம் உடனடியாக பொறுப்பாக இருந்த பொலிஸ் பரிசோதகரால் பறிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த சம்பவம் குறித்து சிரேஷ்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நுகேகொட - கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை மிரிஹானை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(4-7)

## கொவிட்...

கூடும்.

இலங்கையிலும் எதிர்காலத்தில் கொவிட் தொற்று நிலை ஏற்படக் கூடிய அனர்த்தம் நிலவுகின்றது.

இது தொடர்பில் அனைத்து தரப்பினரும் குறிப்பிட்ட வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## இந்...

தியா வழங்கும் ஒத்துழைப்பு முக்கியமானதாக உள்ளதுடன், வரவேற்கத்தக்கதாகவும் காணப்படுகிறது என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வடக்கு புகையிரத பாதையில் மஹவ தொடக்கம் ஓமந்தை வரையான புகையிரத பாதையை புனரமைக்கும் வகையில் மதவாச்சி புகையிரத நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் என்றுமில்லாதவாறு நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார் பாதிப்பு பொதுப் போக்கு வரத்து சேவையில் தாக்கம் செலுத்தியுள்ளது. பொதுப் போக்குவரத்து சேவைத்துறையை மேம்படுத்த இந்திய அரசாங்கம் வழங்கும் உயரிய ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது.

மஹவ முதல் ஓமந்தை வரையான புகையிரத பாதை அபிவிருத்தி இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அபிவிருத்தி செயற்றிட்டமாக கருதப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இந்திய அரசாங்கம் வழங்கும் ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது.

இந்தியாவின் அபிவிருத்தி பணிகள் ஒரு மையத்தை மாத்திரம் வரையறுத்ததாக அமையவில்லை.

இலங்கையில் அனைத்து பகுதிகளிலும் இந்திய அரசாங்கத்தின் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்தார். (4-7)




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் ஆதிக்கத்தை தடுப்பதே இந்தியாவிற்கு பாதுகாப்பு

## விக்னேஸ்வரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

திருகோணமலைத் துறைமுகத்தில் சீன ஆதிக்கம் பெருகவிடாது தடுப்பதே இந்தியாவுக்கு பாதுகாப்பு என தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

துறைமுகத்தில் துறைமுகம்சார் பாரிய கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி நோக்கம் கொண்ட பாரிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கான சாத்தியப்பாடுகள் கண்டறியப்பட்டு அவற்றை இந்திய அரசும் முதலீட்டாளர்களும் விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

இதன் மூலம் வடகிழக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி மலையக தமிழ் இளைஞர் யுவதிகள் பலரும் பெரு நன்மையடைவர்.

புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தில் முதலிட முன்வரும்போது தென்னிந்தியாவைச் சேர்ந்த தொழில்முனைவாளர்கள், உற்பத்தியாளர்கள், முதலீட்டாளர்கள், சேவைத் துறை சார்ந்தவர்களுடன் இணைய வேண்டும்.

அத்துடன், இந்தியாவுடன் இலகுவில் இணைக்கப்படக் கூடிய மன்னாருக்கும் ராமேஸ்வரத்துக்கும் இடையேயான போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு உறவை கட்டி எழுப்பப்பட வேண்டும்என்றும்சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டார். (4-7)

# புதிய ஜனாதிபதி மாளிகையை அமைக்க ரணில் தீர்மானம்?

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு பதிலாக கோட்டை பிரதேசத்தில் புதிய ஜனாதிபதி மாளிகையை அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றுலா பயணிகளை கவரும்வகையில்கோட்டையிலுள்ள ஜனாதிபதிமாளிகை உள்ளிட்ட பல விசேட இடங்களை பயன் படுத்த தீர்மானித்ததன் பிரகாரம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, கோட்டை பிரதேசத்தில் புதிய ஜனாதிபதி மாளிகையை நிறுவவும், தற்போது கொம்பனி வீதியில் உள்ள விமானப் படை தலைமையகத்திற்கு பொலிஸ் தலைமையகத்தை கொண்டு வரவும், வெளிவிவகார அமைச்சை வேறு இடத்திற்கு மாற்றவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்பிறகு, இந்தப் பகுதியை சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்க அரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (4-7)

# பதிவு செய்...

நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ரெலோ அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே குருசாமி சுரேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒன்றரை வருடமாக தமிழ் தேசிய தரப்பில் செயலாற்றுபவர்களும் அரசியல் கட்சிகளும் ஒருமித்து செயற்படுத்துவதற்கான பல முன்னேற்றகரமான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. அது தொடர்ந்தும் நடைபெறும் என நாங்கள் நம்பிக்கை தெரிவிக்கிறோம்.

அரசாங்கமானது ஒரு அரசியல் தீர்வினை தருவதற்கு எங்களை அழைத்துள்ளது. ஆனால் அரசாங்கமோ அல்லது அழைப்பினை விடுத்தவர்களோ அது தொடர்பில் பலமாக இல்லை என்ற யதார்த்தத்தையும் நாங்கள் அறிந்து கொண்டுள்ளோம்.

ஆகவே நாங்கள் எமது மக்கள் முகங்கொடுக்கின்ற அரசியற் கைதிகள் விடுதலை, காணி அபகரிப்புக்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும், அதுபோல காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி என்ற விடயங்களை முன்வைத்து அவற்றுக்கான தீர்வினையும், அதே போன்று அரசியல் யாப்பிலே ஏற்கனவே இருக்கின்ற அதிகாரங்களை முற்றுமுழுதாக பகிர்ந்து ஒரு பலமான மாகாண சபை கட்டமைப்பை ஏற்படுத்தி மாகாணசபை தேர்தல்களை நடாத்த வேண்டும் என்ற விடயத்தினையும் முன்வைத்து அவை நிறைவேறும் பட்சத்தில் நாங்கள் அரசியல் தீர்வினை பற்றி பேசுவதில் தயாராக இருக்கிறோம்.

பல இலட்சம் மக்களுடைய உயிர் தியாகத்திலும், பல்லாயிரக்கணக்கான போராளிகளது உயிர் தியாகத்திலும் முயற்சியிலும் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை ஒருபொழுதும் சிதைவடைவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பாக நாங்கள் தொடர்ந்தும் பயணிப்போம் என்ற எண்ணப்பாட்டில் தான் நாங்கள் இன்னும் இருக்கின்றோம். கூட்டமைப்பை நாங்கள் பதிவு செய்கின்ற போதும், நாங்கள் வரையறுத்து கட்டமைக்கின்ற போதும் பொதுச் சின்னமாக ஒரு சின்னத்தை நாங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சிலவேளை வீட்டுச் சின்னம் பொதுவான சின்னமாக தெரிவுசெய்யப்படாவிட்டால் நாங்கள் பொதுவான ஒரு சின்னத்தை தெரிவுசெய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். (4-7)

# உள்ளூராட்சி சபை தேர்தல் பெரமுன-ஐ.தே.க. சந்திப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, மற்றும் சாகல ரத்நாயக்க, ரவி கருணாநாயக்க, பாலித ரங்கே பண்டார, ருவான் விஜேவர்தன, அகில்விராஜ் காரியவசம் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் அதன் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ, சாகர காரியவசம், ரோஹித அபேகுணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சஞ்சீவ எதிரிமான்ன ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த வாரத்தில் இரு கட்சிகளின் மாவட்டத் தலைவர்களுடன் கலந்துரையாடி எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்க இரு தரப்பினரும் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இரு கட்சிகளுக்கும் இடையிலான முதலாவது உத்தியோக பூர்வ கலந்துரையாடல் இதுவாகும். (4-7)

# பாடப் புத்தகங்கள் அச்சிடும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

அரசாங்க பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களை அச்சிடும் பணி தற்பேர்து இடம் பெற்றுவருவதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு 300 வகையான பாடப் புத்தகங்கள் அச்சிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் புதிய பாடசாலை தவணை காலப் பகுதியில் இந்த புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அரச அச்சகத்தின் தலைமை பொறுப்பதிகாரி திருமதி. கங்கானி லியனகே தெரிவித்துள்ளார். (4-7)

# மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களுக்கு இடையில் 6 பேர் கொண்ட 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பழைய மாணவர்கள் போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தினையும் நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் பாடசாலை எழுதுவினைஞரிடம் (தொலைபேசிஇலக்கம் 077 9201066) பெற்று 11.01.2023 திகதிக்கு முன்பு விண்ணப் பங்களை சமர்பிக்கவும்.

மேலதிக தகவலுக்கு 077 474 4414, 077 900 6939 எனும் தோலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது. (4-7)


பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
A/L 2023, A/L 2024
கணக்கீடு
(தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்)
MR. BALAKAJEN
KBK ACCOUNTING COLLEGE
• பலாலி வீதி, கந்தர்மடம். 077 216 8884
• சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. Whatsapp - 077 452 0043
(14196)

விற்பனைக்கு
• பொங்கல் அகப்பைகள்
• திருவுபலகைகள்
• விளக்குமாறு
• இருபலகை





தைப்பொங்கலை முன்னிட்டு வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவில் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் 077 210 5286
கிளிநொச்சி 077 559 1778
(14195)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13998)
076 825 7716 (ஆகாஸ்)

வேலை வாய்ப்பு
☞ முன்பள்ளி ஆங்கில, தமிழ், கணித ஆசிரியர்.
(முன்பள்ளி Diploma முடித்தவர்கள் / பழக விரும்புபவர்கள்)
☞ ஆடல், பாடல் தெரிந்த அறிவு சார்ந்த் கல்வியை ஊட்டுபவர்கள் அனுபவமுள்ளவர்கள் மட்டும்.
☞ முன்பள்ளி இணைப்பாளர்.
☞ VTA நிறுவனத்தில் முன்பள்ளி Diploma முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
☞ தகுதிகளுக்கு ஏற்ப தகுந்த சம்பளமானது வழங்கப்படும்.
மல்லாகம், வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், இணுவில், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி :- 10.01.2023 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி - 5.00 மணி வரை நடைபெறும்.
கணினி நிலைய வேலைவாய்ப்பு
☞ Ms Office, Photoshop தெரிந்தவர்கள் பழக விரும்புபவர்களுக்கு 6 மாதம் பயிற்சி வழங்கப்படும்.
நேர்முகத்தேர்வுக்கு சமூகமளிக்கும்போது உரிய ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும்.
Work Opportunity
English Teachers (6 Month, 1 Year or 2 Years Contract)
Salary 23,000/= Permonth
(14176)
நேர்முகத் தேர்வுக்குரிய இடம் : Little Masters' Montesoori.
கே.கே.எஸ் றோட்,சிவபதி, இணுவில்.
(இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில்)
T.P :- 077 337 4261

தவறிவிடப்பட்டது
யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் தேசிய அடையாள அட்டை, வங்கி அட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட பேர்ஸ் நேற்றுமுன்தினம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துன் தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு :
077 769 6856
(இ)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org